## கொளத்தூர், கணேஷ் நகர் பகுதியில் – ரூ. 110.92 கோடி மதிப்பில்

# வளிம காப்பு துணை மின் நிலையம் - மாணவர்களுக்கு சமூகநீதி விடுதியில் தானியங்கி குடிநீர் இயந்திரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, அக்.17-

**கொளத்தூர், கணேஷ் நகர் பகுதியில் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் சார்பில் ரூ.110.92 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 230/33 கி.வோ. வளிம காப்பு துணைமின் நிலையத்தை திறந்து வைத்து, ஒருங்கிணைந்த கல்லூரி மாணவர்களுக்கான சமூக நீதி விடுதியில் ரூ.12 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2025) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் பகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் சார்பில் 110.92 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 230/33 கி.வோ. வளிம காப்பு துணைமின் நிலையத்தை திறந்து வைத்தார்.

சென்னை முழுவதும் சீரான மற்றும் விரிவான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான முயற்சியாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் 2023-24 ஆம் ஆண்டில் வட சென்னை வளர்ச்சித் திட்டம், பதினொன்று வெவ்வேறு துறைகளை உள்ளடக்கிய பல்வேறு முக்கியமான திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்காக 4183.03 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 1034.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 திட்டப்பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் 1000.39 கோடி ரூபாய் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் 33.85 கோடி ரூபாய் நிதி பங்கீடு உறுதி செய்யப்பட்டது.

வட சென்னை மக்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் சார்பில், கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் பகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் சார்பில் 230/33 கி.வோ. வளிம காப்பு துணைமின் நிலையம் அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.05.2023 அன்று அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார். அத்துடன், பணிகளின் முன்னேற்றத்தினை தொடர்ந்து கண்காணித்து வந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 5.08.2024 அன்று துணைமின் நிலைய கட்டுமான பணிகளின் முன்னேற்றத்தினை நேரில் ஆய்வு செய்து குறித்த காலத்திற்குள் பணிகளை முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2025) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் பகுதியில், வடசென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் சார்பில் 110.92 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 230/03 கிலோ வளிம காப்பு துணைமின் நிலையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதனடிப்படையில், துணைமின் நிலைய கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற்று, தற்போது புதிய 230 கி.வோ. துணைமின் நிலையம் மின்னூட்டம் பெறும் வகையில், நான்கு 230 கி.வோ. அதிஉயர் மின்னழுத்த மின் பாதைகள் புதிதாக அமைக்கப்பட்டு, இரண்டு 100 எம்.வி.ஏ. திறனுடைய மின்மாற்றிகள் மூலமாக ஏழு 33 கி.வோ. மின் பாதைகள் புதியதாக அமைக்கப்பட்டு, வட சென்னை பகுதியில் மின்கட்டமைப்பின் நம்பகத்தன்மையை மேம்படுத்தி, உறுதியான மின கட்டமைப்பின் வாயிலாக தடையற்ற மற்றும் தரமான மின்சாரம் வழங்க வழிவகை செய்யப்பட்டதோடு, குறைந்த மின்னழுத்த குறைபாட்டினை நிவர்த்தி செய்து, மின்னழுத்த ஏற்ற இறக்கமின்றி சீரான மின்சாரம் விநியோகம் செய்வதை உறுதிசெய்யும் பொருட்டு, 230/33 கி.வோ. வளிம காப்பு துணைமின் நிலையம் முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த துணைமின் நிலையத்தின் மூலமாக ஏற்கனவே இயக்கத்தில் உள்ள கொளத்தூர், பெரியார் நகர், அன்னை நகர், நேர்மை நகர் ஆகிய 33/11 கி.வோ. துணைமின் நிலையங்களுக்கும், தற்போது புதியதாக நிறுவப்பட்டுள்ள கணேஷ் நகர் மற்றும் மாதவரம் ரேடியன்ஸ் 33/11 கி.வோ. துணைமின் நிலையங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும். இத்துணைமின் நிலையங்களின் வாயிலாக கொளத்தூர், பெரியார் நகர், அண்ணாநகர், நேர்மை நகர், கணேஷ் நகர் மற்றும் மாதவரம் சுமார் ஒரு இலட்சம் தொழில் மின் நுகர்வோர்கள், ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வணிக மின் நுகர்வோர்கள் மற்றும் மூன்று இலட்சம் வீட்டு மின் நுகர்வோர்கள் பயன்பெறுவார்கள்.

### ஒருங்கிணைந்த கல்லூரி மாணவர்களுக்கான சமூக நீதி விடுதியில் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரத்தை திறந்து வைத்தல்

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தால் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் (Water Dispensing Unit) நிறுவப்பட்டு பொதுமக்களுக்கு கட்டணமில்லா தரமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 55 தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, கொளத்தூர், கணேஷ் நகரில் உள்ள ஒருங்கிணைந்த கல்லூரி மாணவர்களுக்கான சமூக நீதி விடுதியில் 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரத்தை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். பின்னர், கல்லூரி மாணவர்களுக்கான சமூகநீதி விடுதியை பார்வையிட்டு, அங்குள்ள மாணவர்களுடன் கலந்துரையாடி, விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தடையில்லா சீரான மின்சாரத்தை வழங்கிட துணை மின் நிலையத்தை அமைத்து திறந்து வைத்ததற்காகவும், கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம், மழைநீர் வடிகால் பணிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை கொளத்தூர் பகுதி மக்களுக்காக செயல்படுத்தி வருவதற்காகவும், கொளத்தூர் நலச் சங்கங்களின் நிர்வாகிகள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், பிற்படுத்தப் பட்டோர் நல ஆணையர் முனைவர் சீ.சுரேஷ்குமார், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் பா.கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2025) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் பகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் சார்பில் 110.92 கோடி ரூபாய் செலவில் சுட்டப்பட்டுள்ள 230/33 கி.வோ. வளிம காப்பு துணைமின் நிலையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எஸ்.எஸ். சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, சிவ.வீ. மெய்யநாதன், மேயர், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2025) கொளத்தூர் சட்டமன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 880 கழக நிர்வாகிகளுக்கு சிறப்பு செய்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எஸ்.எஸ். சிவசங்கர், பி. கே.சேகர்பாபு, சிவ.வீ. மெய்யநாதன், மேயர், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2025) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகரில், ஒருங்கிணைந்த கல்லூரி மாணவர்களுக்கான சமூக நீதி விடுதியில் 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2025) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகரில், ஒருங்கிணைந்த கல்லூரி மாணவர்களுக்கான சமூக நீதி விடுதியில் தங்கியுள்ள மாணவர்களுடன் கலந்துரையாடி, விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எஸ்.எஸ். சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, சிவ.வீ. மெய்யநாதன், மேயர், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் லிமிடெட் நிறுவனம்

# ரூ.2000 கோடி முதலீட்டில் விரிவாக்கத் திட்டத்திற்கான ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்றது!

சென்னை, அக்.17-

சென்னை, போரூரில் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில் நுட்ப மற்றும் புத்தாக்க மைய விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (15.10.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், 5 வருடங்களில், 2000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சென்னை போரூரிலுள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்க திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

### ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் நிறுவனம்

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமம், உலகளாவிய ஃபார்ச்சூன் (Global Fortune) 500 நிறுவனங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. அதன் துணை நிறுவனங்களில் ஒன்றானது, ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் நிறுவனம். அந்நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை, கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை, போரூரில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 5 வருடங்களில், 2000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சென்னை போரூரிலுள்ள ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்க திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர், நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், ஹிட்டாச்சி நிறுவனத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அலுவலர் ஆண்ட்ரியாஸ் ஷீரன் பெக், ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வேணு நுகரி மற்றும் அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.